**சார்பு நீதிமன்றம், திருமயம்**
**முன்னிலை – திரு. G. அருண்குமார், B.Sc., B.L.,**
**கூடுதல் சார்பு நீதிமன்றம், புதுக்கோட்டை.**
**சார்பு நீதிபதி, திருமயம்(மு.கூ.பொ.)**
**2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் தேதி வெள்ளிக்கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் பங்குனி மாதம் 27 ஆம் நாள்)**

**அசல் வழக்கு எண்.26/2023**
**CNR.No.TNPD19000058–2023**

1.வெள்ளைச்சாமி
2.முருகன் ...வாதிகள்

–எதிர்–

1.முத்துச்சாமி
2.செல்வம்
3.பெரியய்யா
4.பாண்டி .... பிரதிவாதி

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்பாக 18.03.2026 ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.பொன்கஜேந்திரன் அவர்கள் ஆஜராகியும், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.திருமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், பின்னிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யாதகரணத்தினாலும், 3,4 பிரதிவாதிகளுக்கு சம்மன் சார்வு செய்யப்பட்டு பின்னிட்டு நீதிமன்றத்தில் ஆஜரின்மை காரணத்தினாலும், பின்னிட்டு 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், வாதிகள் தரப்பு வாதம் கேட்கப்பட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

ARUNKUMAR Digitally signed by ARUNKUMAR Date: 2026.04.10 18:10:55 +0530

**தீர்ப்புரை**

தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டதென உரிமை விளம்பல் செய்யும், தாவா சொத்தில் வாதிகளின் அமைதியான அனுபவத்தினை பிரதிவாதிகளோ, அவர்வகை ஆட்களோ எந்தவித தடை, தகராறு, தர்க்கம் செய்யக்கூடதாதென நிரந்தர தடையாணை பரிகாரம் கோரியும் மற்றும் செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வழக்குரையின் சுருக்கம்:**

(i) தாவா சொத்து வாதிகளுக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். ஆதியில் வாதிகளின் தாத்தா கட்டபிச்சைவீரன் மகன் பெரியகருப்பன் பெயில் பட்டா ஏற்பட்டு அவரின் அனுபவத்திலும், பாத்தியத்திலும் இருந்து வந்தது. பட்டா எண்.131. பெரியகருப்பன் இறந்தபிறகு அவரின் ஒரே வாரிசான சாத்தையா தாவா சொத்தினையும், இதர சொத்துக்களையும் அடைந்து அனுபவித்து வந்தார். சாத்தையா மனைவி சிகப்பி. சிகப்பி 1997ம் வருடம் இறந்துவிட்டார். சாத்தையா – சிகப்பி தம்பதியினருக்கு இரண்டு ஆண் மக்கள் வாரிசுகள் ஆவார்கள்.

(ii) சாத்தையா கடந்த 26.02.2017ம் வருடம் Intestate–க இறந்துவிட்டார். சாத்தையா இறந்தபிறகு வாதிகள் தாவா சொத்தினை வாரிசுமுறையில் அடைந்து அனுபவித்து வருகின்றனர். வாதிகள் தாவா சொத்தினை பொறுத்தும், இதர பொதுகுடும்ப சொத்துக்கள் பொறுத்தும் கடந்த 17.05.2022ம் தேதி ஒரு பாகபிரிவினை பத்திரம் எழுதி பதிந்து கொண்டனர். அப்பாகபிரிவினை கீழாநிலை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.592/2022 என பதிவு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்திற்கு வாதிகள் பெயரில் கூட்டுபட்டா ஏற்பட்டுள்ளது. பட்டா எண்.406. கடந்த 17.05.2022 தேதிய பாகபிரிவினைப்படி தாவா சொத்தினை பொறுத்து உட்பிரிவு செய்துகொள்ளவில்லை.

iii) இந்நிலையில் வாதிகள் தாவா சொத்தில் கடந்த 17.08.2022ம் தேதி கல்லுக்கால்கள் ஊன்றி கொண்டிருந்தபோது பிரதிவாதிகள் வீண் பிரச்சனை செய்து வந்தனர். அதனால் 1ம் வாதி காவல் நிலையத்தில் பிரதிவாதிகள் மீது கடந்த 17.08.2022ம் தேதி புகார் கொடுத்தார். அதன்பின்னர் வாதிகள் தாவா சொத்தினை கடந்த 15.12.2022ம் தேதி நிலஅளவையர் மூலம் அளவை செய்தனர். அதன்படிக்கு வாதிகளுக்கு அளவை சான்று வழங்கப்பட்டது.

ARUNKUMAR
Digitally signed by ARUNKUMAR
Date: 2026.04.10 18:11:03 +0530

iv) வாதிகள் கடந்த 29.12.2022ம் தேதி தாவா சொத்தில் இருந்த முட்புதர்களை சுத்தம் செய்து கொண்டிருந்தனர். அப்போது பிரதிவாதிகள் தாவா சொத்தில் அத்துமீறி பிரவேசித்து வாதிகளின் அனுபவத்தினை தடைசெய்ய முற்பட்டனர். பிரதிவாதிகள் ஆட்கள்பலம், அரசியல் பலம் உள்ளவர்கள் எதையும் செய்ய துணிந்தவர்கள். ஊரில் வெளிப்படையாக வாதிகளின் அனுபவத்தினை தடைசெய்ய போவதாக பேசி வருகின்றனர்.

v) பிரதிவாதியை தடுக்கும் வகையில் நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி வாதி இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

3) பிரதிவாதிகளுக்கு சம்மன்சார்பு செய்யப்பட்டும், நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் பிரதிவாதிகளுக்கு எதிராக 03.01.2025 தேதியன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, தொடர்ந்து அவ்வாறே இருந்து வருகிறார்கள்.

4) வாதி தரப்பில் வாதி திரு.கணேசன் வா.சா.1. ஆகவும், திரு. பன்னீர்செல்வம் வா.சா.2 ஆகவும், விசாரனை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் ஏதும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

## 5. தீர்வு

வழக்கு சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என உரிமை விளம்பல் பரிகாரமும், வாதிகளின் அமைதியான அனுபவத்தினை பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்துக்கள் ஆதியில் பெரியகருப்பன் என்பவருக்கு பாத்தியப்பட்டு இருந்து பூர்வீக சொத்துக்கள் என்றும், பெரிய கருப்பன் இறந்த பிறகு அவருடைய ஒரே மகனான சாத்தையா என்பவருக்கு வழக்கு சொத்துக்கள் வந்ததாகவும், மேற்படி சாத்தையாவின் மகனான வெள்ளைச்சாமி மற்றம் முருகன் பெயரில் வழக்கு சொத்துக்கு பட்டா எண்.406 ஏற்பட்டுள்ளது. மேற்படி சாத்தையா 26.02.2017ம் தேதி இறந்துவிட்டார் என்பதற்கு இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.2 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சாத்தையாவிற்கு வாதிகள் இருவரும் தான் வாரிசுகள் என்பது வா.சா.ஆ.3 வாரிசு சான்றிதழ் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் வழக்கு சொத்தினை அளவீடு செய்து

ARUNKUMAR Digitally signed by ARUNKUMAR Date: 2026.04.10 18:11:10 +0530

திருமயம் வட்ட சார்பு ஆய்வாளர் அளவை சான்று வழங்கியுள்ளார். அவர் வழக்கு சொத்தின் 4 பக்கத்தையும் அளவீடு செய்து அளவை சான்று பெற்றுள்ளார். 1ம்பிரதிவாதி மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்து சொத்தின் அனுபவத்தை இடையூறு செய்வதற்கு சங்கதி முன் வைக்கப்பட்டுள்ளது. வாதிகள் தந்தைக்கு பூர்வீக வழி பாத்தியப்பட்ட சொத்து என்பது வாதிகள் ஏற்படுத்திகொண்ட பாகப்பிரிவினை ஆவணம் மற்றும் பிழை திருத்த ஆவணத்தில் காட்டியுள்ளார். 16.08.2021 அன்று பட்டா மாறுதல் உத்தரவு ஏற்பட்டுள்ளது என்பது வா.சா.ஆ.8 மூலம் தெரியவருகிறது. வாதிகள் தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

இறுதியாக, வாதிகள் வழக்கு அனுமதிக்கப்பட்டு, வழக்கு சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என விளம்பல் பரிகாரமும், பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் இன்று 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

ARUNKUMAR Digitally signed by ARUNKUMAR Date: 2026.04.10 18:11:16 +0530

சார்பு நீதிபதி,

திருமயம்(மு.கூ.பொ.)

<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>:

வா.சா.1 – திரு.கணேசன்

வா.சா.2 – திரு.பன்னீர்செல்வம்

<u>வாதி தரப்பு சான்றாவணம்</u>:

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 14.05.2014 | நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டா பதிவேடு | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | --- | வீட்டு வரி ரசீது (எண்ணிக்கை –4) | அசல் |
| வா.சா.ஆ.3 | --- | மின் கட்டண ரசீது (எண்ணிக்கை –13) | அசல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.4 | 16.05.2018 | தான செட்டில்மெண்ட் பத்திரம் | அசல் |
| வா.சா.ஆ.5 | 29.10.200 | பட்டா மாறுதல் உத்தரவு | அசல் |
| வா.சா.ஆ.6 | 23.02.2015 | வில்லங்கச் சான்று | சான்றிட்ட நகல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும்  சான்றாவணம்– இல்லை</u>

ARUNKUMAR Digitally signed by ARUNKUMAR Date: 2026.04.10 18:11:21 +0530

சார்பு நீதிபதி,

திருமயம் (மு.கூ.பொ.)